இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

588

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 03

**EPU3532– கலைத்திட்ட கற்கையும்செய்கையும் மொழிக்கற்கைகள் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 10.02.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. மனித மொழிகளை சுருக்கமாக விபரிக்குக.

2. முன் வாசிப்பு திறன்களை பெறுதலின் முக்கியத்துவங்கள் **மூன்றினை** (03) எழுதுக.

3. மொழி கற்பித்தலில் ஊடகத்தினை எவ்வாறு பயன்படுத்த முடியுமென்பதை சுருக்கமாக விளக்குக.

4. வெற்றிகரமான ஆசிரியரொருவர் மாணவர்களின் மொழி விருத்திக்காக வெளிச்சூழலை எவ்வாறு அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தமுடியுமென்பதை **மூன்று** (03) விடயங்கள் மூலமாக சுருக்கமாக விளக்குக.

5. ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் கேட்டல் குறைபாடுடைய மாணவர்களின் **மூன்று** (03) பண்புகளை சுருக்கமாக விளக்குக.

6. ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் துணைச்சாதனங்களை பயன்படுத்துவதன் அனுகூலங்கள் **மூன்றினை** (03) விளக்குக.

7. மாணவர்களின் படைப்பாற்றலை மொழிமூலமாக எவ்வாறு உருவாக்கலாம் என்பதை உதாரணம் மூலம் சுருக்கமாக விபரிக்குக.

8. தேர்ச்சி தொடர்புபட்ட தொடர்பாடல் என்பதால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விளக்குக.

**(5X8=40 புள்ளிகள்)**

## பகுதி II

9. **(i)** "பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இளம் பிள்ளைகளின் மொழித் திறனை விருத்தி செய்வதற்கு கட்டாயம் வசதியளிக்க வேண்டும்." உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

**(ii)** வினை திறனான கேட்டல் பயிற்சியின் போது பெற்றோர்கள் சந்திக்கும் மறைமுகமான சவால்களைப் பற்றிக் கலந்துரையாடுக. இச் சவால்களை சமாளிப்பதற்கான உத்திகளை முன்மொழிக.

**(12 புள்ளிகள்)**

10. **(i)** ஆரம்பக் கலைத்திட்டம் என்ற வகையில் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியின் முக்கியத்துவத்தினை கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** மாணவர்கள் இத்தேர்ச்சி அடைவதனை உறுதி செய்வதில் ஆசிரியர்களின் பொறுப்புக்கள் பற்றி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. **(i)** மொழிக் கற்றலில் செல்வாக்கு செலுத்தும் சமூக பொருளாதார பின்னணியினை பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

**(ii)** பிள்ளையொன்றின் கல்விசார் மற்றும் சமூக நல்வாழ்வு கொண்ட ஆரம்ப பாடசாலை கட்டத்தில் அடையாளப்படுத்தப்படாத மொழிக் கடினத்தன்மையின் அத்தியாவசியமான நீண்ட கால தாக்கத்தினை கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

12. **(i)** எழுதுதல் திறனுக்காக அடிப்படை முன் எழுதுதல் செயற்பாடுகளின் வகிபங்கினை பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான முன் எழுதுதல் செயற்பாடுகள் **இரண்டு** (02) எழுதுக. ஆரம்ப பாடசாலை மாணவர்களின் எழுதுதல் திறனை அதிகரிக்க இச்செயற்பாடுகளை எவ்வாறு வினைத்திறனாக செயற்படுத்த முடியும் என்பதனை பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

13. **(i)** ஆரம்ப பாடசாலைகளில் மொழித் தேர்ச்சி மதிப்பிடலில் நம்பகத்தன்மையுடைய கணிப்பிடலின் (Authentic Assessment) முக்கியத்துவத்தினை பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

**(ii)** முன்பள்ளி மற்றும் ஆரம்ப பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் கணிப்பீட்டு முறைகளை ஒப்பீட்டளவில் ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*